**சுருக்கம்**

குடியரசு நாள் 2013 – 26.01.2013 அன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் (கோ–ஆப்டெக்ஸ்) அலங்கார ஊர்தி பங்கேற்றதற்கான செலவினம் ரூ.87,900/- ஒப்பளிப்பு செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் (டி1) துறை**

அரசாணை (பத்தாண்டு) எண். 12

நாள் 05.03.2013
நந்தன மாசி 21
திருவள்ளுவராண்டு 2044

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.428, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் (பொருட்காட்சி மற்றும் விழா) துறை, நாள் 20.12.2012.
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கடிதம் ந.க. எண்.53144/2012/எச்–3, நாள் 13.02.2013.

---

**ஆணை:-**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 26.01.2013 அன்று நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் சார்பாக அலங்கார ஊர்தி பங்கேற்பதற்கான செலவினமாக, ரூ.87,900/-ஐ நிர்வாக ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2. 26.01.2013 அன்று நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் சார்பாக அலங்கார ஊர்தி பங்கேற்றதற்கான செலவினமாக ரூ.87,900/-ஐ தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்குமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களின் பரிந்துரையை ஏற்று, 26.01.2013 அன்று நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் சார்பாக அலங்கார ஊர்தி பங்கேற்றதற்கான செலவினமான ரூ.87,900/-ஐ (ரூபாய் எண்பத்தேழாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு (கோ–ஆப்டெக்ஸ்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

/ த.பி.பா /

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

" 2851 00 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் –
103 கைத்தறித் தொழில்கள் – I திட்டத்தில் சேராதது
AB கைத்தறி – துணித் தொழில் இயக்ககம் –
08 விளம்பரமும் பிரச்சாரமும் – 01 விளம்பரக்
கட்டணங்கள்"

(த.தொ.கு 2851 00 103 AB 0810)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு (கோ–ஆப்டெக்ஸ்) வழங்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை 1.3.2013 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண். 9904/13–இன்படி நிதித் (தொழில்கள்) துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்
அரசு செயலாளர்

பெறுநர்
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் சென்னை–108.
மேலாண்மை இயக்குநர், கோஆப்டெக்ஸ், சென்னை–8.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18
மாநில கணக்காயர் (CAS) சென்னை–9.
நகல் :
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (பொருட்காட்சி மற்றும் விழா) துறை, சென்னை – 9.
நிதி (தொழில்கள்) த்துறை, சென்னை–9.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (ஏ1 / பி1) த்துறை, சென்னை –9.
இ.கோ /உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்படுகிறது/

அரசு சார்புச் செயலாளர்